**TNPSC குரூப் 2A தேர்வில் எளிதில் PASS ஆக வேண்டுமா? அதற்கான வழிகள் சில :-**

**1] அரசியல் அறிவியல் -** LAXMIKANTH indian polity புத்தகத்தை முழுமையாக படிக்க வேண்டும். ஆங்கிலத்தில் தான் புத்தகம் உள்ளது. வேறு வழியில்லை. அந்த புத்தகத்தை முழுமையாக படித்தால் உறுதியாக அரசியல் அறிவியல் பகுதியில் முழு மதிப்பெண் பெற்று விடலாம். + 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள சமச்சீர் கல்வி புத்தகங்கள்... + முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் முழுவதும்...

**2] பொதுத்தமிழ் -** வழக்கமாக அனைவரும் கூறுவது போல 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள சமச்சீர் கல்வி புத்தகங்கள்... + மற்றும் ஏதாவது ஒரு மூல புத்தகங்கள் - [ எ-டு] தேவிரா.. + முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் முழுவதும்...

**3] நடப்பு நிகழ்வுகள் -** www.gktoday.in - இந்த இணையதளத்தில் உள்ள நடப்பு நிகழ்வுகளை படித்தால் மட்டுமே, நடப்பு நிகழ்வுகள் பகுதியில் முழு மதிப்பெண் பெற முடியும். தற்போது நடைபெற்ற குரூப் 2A தேர்வு மற்றும் அதற்கு முன் நடைபெற்ற அனைத்து TNPSC தேர்வுகளிலும் கேட்கப்பட்ட நடப்பு நிகழ்வுகள் அனைத்தும் அல்லது மூன்றில் 2 1/2 பங்கு வினாக்கள் www.gktoday.in - இந்த இணையதளத்தில் உள்ளன.

**குறிப்பு :-** www.gktoday.in - இந்த இணையதளத்தில் நடப்பு நிகழ்வுகள் ஆங்கிலத்தில் மட்டும் தான் உள்ளன. தமிழில் நடப்பு நிகழ்வுகள் வேண்டுமென்றால் WWW.WINMEEN.COM என்ற இணையதளத்தை பார்க்கவும். இந்த இணையதளத்தில் உள்ள நடப்பு நிகழ்வுகள் www.gktoday.in - தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டவை.

**4] கணிதம் -** முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் முழுவதும்...[ எ-டு] சக்தி அறிவுக்கூர்மை புத்தகம். [ இந்த புத்தகத்தில் இதுவரை நடைபெற்ற அனைத்து TNPSC தேர்வுகளிலும் கேட்கப்பட்ட கணித வினாக்கள் முழுமையான விளக்கங்களுடன் உள்ளன. + RS Aggarwal Quantitative Aptitude.

**5] அறிவியல் -** அறிவியலை பொறுத்தவரை இவையே போதுமானவை - 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள சமச்சீர் கல்வி புத்தகங்கள்... + முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் முழுவதும்...

**6] புவியியல் -** 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள சமச்சீர் கல்வி புத்தகங்கள்... + முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் முழுவதும்...

**7] பொருளாதாரம் / வணிகவியல் -** 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள சமச்சீர் கல்வி புத்தகங்கள்... + முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் முழுவதும்...

**8] வரலாறு -** 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள சமச்சீர் கல்வி புத்தகங்கள்... + முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் முழுவதும்... [ வரலாறு பகுதியை பொறுத்த மட்டும் இந்த புத்தகம் தான் என்று குறிப்பிட்டு கூற முடியாது. காரணம் - வினாக்கள் பல நிலைகளில் கேட்கப்படுகின்றன. எல்லா விவரங்களையும் ஒரே புத்தகத்தில் கூற முடியாது. 2 , 3 வரலாறு புத்தகங்கள் வாங்க வேண்டும். அல்லது இணையத்தில் சென்று நமக்கு வேண்டிய அனைத்து குறிப்புகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். ] உதாரணம் - நீலகண்ட பிரம்மச்சாரி அவர்களை பற்றிய குறிப்புகள் அனைத்து புத்தகங்களிலும் உள்ளன. ஆனால் அவர் பிறந்த ஊர் நிறைய புத்தகங்களில் இல்லை. அதனால் தான் வரலாறு பகுதியை படிக்கும் போது அது தொடர்பான பகுதிகளை இணையதளத்தில் இருந்து எடுத்து நம் பாடக்குறிப்புகளுடன் சேர்த்து கொள்ள வேண்டும்.

- மேலே கூறியவாறு - புத்தகங்களை படித்தால் முதல் முறையிலே அல்லது எளிதாக தேர்ச்சி பெறலாம்.